**மொனராகல மாவட்டம் 18 கமநலசேவைக் குழுக்கள்- 2023**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

1.1 மொனராகல மாவட்டத்தின் 18 கமநலசேவை குழுக்களின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் பிரிவு 58(1) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 மொனராகல மாவட்டத்தின் 18 கமநல குழுக்கள் தொடர்பாக 2023 ஆண்டில் வெளியிடப்பட்டிருந்த 18 கணக்காய்வு அறிக்கைகளில் 17 குழுக்களின் அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்பட்டு ஒரு குழுவிற்காக மறுப்பு அபிப்பிராயம் வெளியிடப்படுவதற்கான காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தில் அடங்கியுள்ள கணக்கீட்டு கொள்கைகளுடன் இணக்கமின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 18 கமநல சேவைக் குழுக்களினால் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் படி நிதிக்கூற்றுத் தொகுதியில் அடங்க வேண்டிய ஆக்கக்கூறொன்றாகிய உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை. | சரி செய்வதற்கு அனைத்து நிலையங்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டது. | பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் படி நிதிக்கூற்றுத் தொகுதி அனைத்தும் ஆக்கக்கூறுகளும் அடங்கலாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 16 கமநல சேவைக் குழுக்களினால் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2017 பெப்ரவரி 09 திகதிய 15/2016 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை 107(திருத்தம் 5) இன் படி பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வருடாந்த கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு நியம குறிப்பின் படி அந்த இணக்கப்பாடு பேணிச் | பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் படி கணக்குகள் தயாரிக்கும் படி அறிவுரை வழங்கப்பட்டதுடன், எதிர் காலத்தில் சரி செய்யப்படும். | சுற்றறிக்கைக்கு இணங்க கமநல சேவைக் குழுக்களின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் கடைபிடிக்கப்பட வேண்டும். |

சென்றிருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அலுத்வெவ கமநல சேவைக் குழுவின் கையில் காசு ஏதும் காணப்படாத போதிலும் நிதி நிலைமைக் கூற்றில் மற்றும் கமநல சேவைக் குழுவின் நிறைவேற்றுச் செயலாளரின் கையொப்பத்துடன், சமர்ப்பிக்கப்பட்டிருந்த கையில் காசு சான்றிதழில் ரூபா 530,074 தொகை காணப்படுகின்றதென காட்டப்பட்டிருந்தமையால் அத் திகதியில் உள்ளவாறு குழுவின் நடைமுறைச் சொத்துக்கள் அப் பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | கையில் காசு மீதி தொடர்பாக விசாரணைக் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது. அதன் பரிந்துரை மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பற்றாக்குறை தொடர்பான உத்தியோகத்தர்களை இனங்கண்டு தேவையான ஒழுக்காற்றுச் செயற்பாடுகள் கடைபிடித்தல் மற்றும் உண்மையான நடைமுறைச் சொத்துக்களை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ஹிங்குருகடுவ கமநல வங்கிக்காக 02 அச்சு இயந்திரங்கள் மற்றும் ஸ்கேன் இயந்திரமொன்று கொள்வனவு செய்வதற்காக கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 194,205 தொகையினை முற்கொடுப்பனவு ஒன்று என கணக்கீடு செய்திருக்கவில்லை. | அடுத்த கணக்கு அறிக்கையில் சரி செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டது. | முற்கொடுப்பனவு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 09 இன் படி கிரயம் அல்லது நிகர தேறிய பெறுமதி ஆகிய இரண்டு பெறுமதிகளிலும் குறைந்த பெறுமதியில் இருப்புக்களின் பெறுமதி காட்டப்பட வேண்டியிருந்த போதிலும், 15 கமநல சேவைக் குழுக்கள் தொடர்பாக எதுவித விற்பனைப் பெறுமதியும் காணப்படாத காலவதியாகியிருந்த கூட்டுத்தொகை ரூபா 4,636,342 தொகைக்கான இருப்புக்களின் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் | 2024 ஆண்டின் கணக்குகளில் சரியான தகவல்கள் சமர்ப்பிக்கப்படும் என. | காலவதியாகிய இருப்புக்களை முறைப் பிரகாரம் அகற்றப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீதி இருப்பு என உட்படுத்தப்பட்டிருந்தமையால் அந்தப் பெறுமதியினால் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் மிகைகள் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 2011 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை கமநல அபிவிருத்தித் திணைக்களம், கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் கொள்வனவு செய்யப்பட்டு 14 கமநல சேவைக் குழுக்களுக்கு வழங்கியிருந்த 333 அலகு அலுவலக உபகரணங்கள், விவசாய அமைப்புக்களின் நன்கொடை என 03 கமநல சேவைக் குழுக்களுக்கு வழங்கியிருந்த 55 அலுவலக உபகரணங்களும் பெறுமதியை இனங்கண்டு நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | அனைத்து அலுவலக உபகரணங்களின் பெறுமதியையும் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யும் படி அறிவுரை வழங்கப்பட்டது. | குழுக்களுக்கு கிடைத்துள்ள அனைத்து சொத்துக்களின் பெறுமதியையும் பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உட்படுத்த வேண்டும். |
| (உ) | 15 கமநல சேவைக் குழுக்களின் கமநல சேவை நிலையங்கள் அமைந்துள்ள காணிகளை உரித்தாக்கி பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | காணிகள உறித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், உரித்தாக்கியவுடனே பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு தேவையான அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | குழுக்களுக்கு சொந்தமான காணிகளின் உரிமையை உறுதிப்படுத்தி பெறுமதியினை கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது கணினி மற்றும் துணைக் கருவிகள் கொள்வனவு செய்வதற்காக 13 கமநல சேவைக் குழுக்களினால் கமநல சேவை உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு ரூபா 5,991,960 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், குறிப்பிட்ட உபகரணங்கள் குழுக்களுக்கு கிடைத்திருக்காத போதிலும், நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் நடைமுறை அல்லாத சொத்துக்கள் ரூபா 5,991,960 தொகையால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | கணினி துணைக் கருவி குழுவிற்கு கிடைத்த பின்னர் சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எதிர் காலத்தில் சரி செய்யப்படும். | சொத்துக்களை உரிய முறையில் இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | மெதகம கமநல சேவைப் பிரிவினால் மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டியிருந்த கமநல வங்கி பங்கிலாபம் ரூபா 408,949 தொகை கணக்குகளில் சீராக்கல் செய்யப்பட்டிருக்காமையால் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் ஆண்டிற்கான இலாபம் அந்தப் பெறுமதியினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | அடுத்த கணக்கு அறிக்கையில் சரி செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | பெற வேண்டிய பங்கிலாபம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | 03 கமநல சேவைக் குழுக்களினால் பல்வேறு நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டு ஏல விற்பனை செய்து பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்த மற்றும் செயற்படாமல் காணப்பட்ட ரூபா 3,296,984 தொகைக்கான சொத்துக்கள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு குழுக்களின் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | ஆணையாளர் நாயகத்தின் அறிவுரை மற்றும் அங்கீகாரத்தின் மீது அடுத்த நிதிக்கூற்றுக்களில் இருந்து அகற்றி சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பேன். | அப்புறப்படுத்தக்கூடிய நிலையில் காணப்பட்ட நிலையான சொத்துக்கள் அரச நிதிச்சுற்றறிக்கை 01/2020 மறறும் நிதிப்ப பிரமாணங்கள் 770(4) இணங்க நிதிக்கூற்றுக்களிலிருந்த அகற்றவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டின் போது 09 கமநல சேவை நிலையங்களில் காணப்பட்ட ரூபா 14,494,265 தொகை பெறுமதியான நடைமுறை அல்லாத சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படாமையால் நடைமுறை அல்லாத சொத்துக்கள் அந்தப் பெறுமதியினால் விரைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டு கணக்கறிக்கையில் சரியான சமர்ப்பிப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நடைமுறை அல்லாத சொத்துக்களின் சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ஒ) | 06 கமநல சேவைக் குழுக்களினால் பேணிச் செல்லப்பட்டிருந்த நிலையான வைப்புக்கள் தொடர்பாக பெற வேண்டிய வட்டி ரூபா 500,074 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான மிகை மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் அந்தப் பெறுமதியினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | பெற வேண்டிய வட்டி சரியாக கணக்கீடு செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டது. | பெற வேண்டிய வட்டியை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | 03 கமநல சேவைக் குழுக்களினால் பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டு ஏடுகளிலிருந்து அகற்றப்பட்டிருந்த பயன்படுத்தக்கூடிய நிலையில் காணப்பட்ட ரூபா 2,889,290 இற்கான இயந்திர உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்து, மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இயந்திரம் மற்றும் உபகரணங்கள் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | குறிப்பிட்ட சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் சித்தரித்துக் காட்டப்பட வேண்டும். |
| (ஔ) | 02 கமநல சேவைக் குழுக்களினால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட உர இருப்பின் பெறுமதி ரூபா 12,722,644 தொகை பெற வேண்டிய மீதியொன்றென நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | பெறுமதியினை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நடைமுறைச் சொத்துக்களின் ஆக்கக்கூறுகள் சரியாக வகைப்படுத்தப்பட வேண்டும். |
| (க) | 07 கமநல சேவைக் குழுக்களினால் மீளாய்வாண்டின் போது மாவட்ட அலுவலகத்திலிருந்து மீளளிப்பு செய்ய வேண்டிய ரூபா 553,236 தொகை பெற வேண்டிய மீதியினை செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் பெற வேண்டிய கணக்குகள் மற்றும் மிகை அந்தப் பெறுமதியினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய பெறுமதிகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ங) | 03 கமநல சேவைக் குழுக்களினால் மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய செலவுகள் ரூபா 183,789 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான செலவு மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் அந்தத் தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய பெறுமதிகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ச) | மேதகம கமநல சேவைக் குழுக் கட்டிடம் 2014 ஆண்டில் ரூபா 4,085,250 இற்கான பெறுமதிக்கு பெறுமதி மதிப்பீடு செய்து 09 வருடங்கள் கடந்திருந்த | அனைத்து நிலையங்களும் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது. சரியாக | சொத்துக்களின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், மீண்டும் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்கீடு செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஞ) | 02 கமநல சேவைக் குழுக்களில் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உர இருப்பின் பெறுமதி ரூபா 486,713 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தமையால் மிகை மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் அந்தப் பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டுள்ளது. | சரியாக கணித்து கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இருப்புக்களின் பெறுமதி சரியாக கணித்து கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ட) | 02 கமநல சேவைக் குழுக்களில் விவசாய ஆய்வு உற்பத்தி உதவியாளர்களுக்கு 2013 முதல் 2015 ஆண்டுகளின் போது வழங்கப்பட்டிருந்த 96 அலுவலக உபகரணங்கள் பொருட் பதிவேட்டில் பதிந்திருக்காததுடன், அவற்றின் பெறுமதியை பெற்றுக்கொண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வழங்கியிருந்த அலுவலக உபகரணங்களின் பெறுமதியை பெற்றுக்கொண்டு கணக்கீடு செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | குழுக்களுக்கு உரிமையாக காணப்படும் அனைத்துச் சொத்துக்களும் பொருட் பதிவேட்டில் பதிவு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| படல்கும்புர, பிபில மற்றும் மொனராகல ஆகிய 03 குழுக்களில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 09 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் படி காணப்பட்ட மீதிகள் அட்டவணைகளின் படி காணப்பட்ட மீதிகளும் இணக்கஞ் செய்த போது ரூபா 200,754 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | கணக்கு மீதிகள் அட்டவணைகளுடன் இணக்கஞ் செய்து சரியான பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களுடன் உட்படுத்த வேண்டும். |

### 1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 07 கமநல சேவைக் குழுக்களின் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுப் பெறுமதி ரூபா 31,260,294 இற்கான 74 கணக்கு மீதிகள் தொடர்பாக அவற்றை உறுதிப்படுத்துவதற்கு மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதங்கள், நிதியம் நிறுவப்பட்ட குறிக்கோள், விரிவான அட்டவணைகள், காலப் பகுப்பாய்வுகள் ஆகிய எழுத்துமூலச் சான்றுகள் சமர்ப்பிக்கபடாமையால் அவற்றை திருத்திகரமாக மெய்மையாய்வதற்கு / சான்றுறுதி செய்வதற்கு முடியாமல் இருந்தது. | சரி செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக போதியளவு சான்றுகள் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். |

### 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம்** | | | |
| (i) | உபபிரிவு 51(1) | சட்டம் அங்கீகரிக்கப்பட்டு 23 வருடங்களை மிகையான காலம் கடந்திருந்த போதிலும், 18 கமநல சேவை அதிகாரப் பிரதேசங்களுக்காக சட்டத்தின் ஏற்பாடுகளின் படி கமநல அபிவிருத்தி சபைகள் நிறுவப்பட்டிருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் அறிவுரையின் படி செயற்படுத்தப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) | உபபிரிவு 51(7) | கமநல குழுவின் தலைவர் நியமனம் செய்தல், தலைவரின் பணிகள், நிரந்தரக் குழு நியமனம் செய்தல் மற்றும் செயலாளர், பொருளாளர் தொடர்பான கட்டளைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தின் கருத்து தெரிவித்திருக்கவில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க கமநல அபிவிருத்தி சபையொன்று நிறுவப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | உபபிரிவு 52(1) | அனைத்து கமநல குழுக்களினாலும், ஒவ்வொரு பயிர்ச் செய்கை போகத்திற்கு முன்னர், கமநல அபிவிருத்தி அதிகாரப் பிரதேசத்திற்காக விவசாயம் சார் நிகழ்ச்சித் திட்டமொன்று மற்றும் தேவையான அபிவிருத்தித் திட்டங்கள் தயாரித்திருக்கவில்லை. | விவசாயம் சார் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் திட்டங்கள் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பேன். | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க விவசாயம் சார் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் தேவையான அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (iv) | உபபிரவு 53(1) | அனைத்து கமநல சேவைக் குழுக்களினாலும் கமநல அதிகார பிரதேசத்தில் விவசாய காணிகள் தொடர்பான பதிவேடொன்று தயாரித்தல், திருத்தங்கள் மற்றும் மறுசீரமைப்புக்களுடன் பேணிச் செல்லல் மற்றும் அந்தக் குழுவின் அதிகாரப் பிரதேசத்தில் விவசாயக் காணிகள் தொடர்பான முதலாவது பதிவேடு ஆணையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு சான்றுபடுத்தல் ஆகிய கருமங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில் லை. | விவசாய காணிப் பதிவேடு தயாரிக்கப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றது. அதன் முதற் பதிவேடு கமநல அபிவிருத்தி ஆணையாளர் சார்பாக உதவி ஆணையாளரினால் சான்றுபடுத்தப்பட்டிருந்தது. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (v) | உபபிரிவு 54(1) | அனைத்து விவசாயக் காணிகளிலும், காணி உரிமை விவசாயி அல்லது அனுபவிப்பவரினால் அந்தக் காணி அமைந்துள்ள அதிகாரப் பிரதேசத்தின் கமநலக் குழுவிற்கு அந்த விவசாயக் காணி தொடர்பான உரிய விபரங்கள், அதன் உரிமை தற்போது வதியுமிடம் அந்தச் சபையினால் குறிப்பிடக்கூடிய ஏதேனும் காலப் பகுதியொன்றினுள் நடாத்திச் சென்றிருந்த அனைத்து விவசாய அலுவல்கள் தொடர்பான தகவல்கள் | இந்த விபரங்கள் தேவைப்பாட்டின் படி பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆவணமொன்றின் மூலம் அறிவித்திருக்கவில்லை. | | |
| (vi) | உபபிரிவு 56(1) | அனைத்து விவசாயக் காணிகளுக்குமான விதிக்கப்படுகின்ற ஏக்கர் வரித் தொகை, விவசாய காணியொன்றின் அனைத்து உரிமையாளர்களினாலும் அல்லது அனுபவிப்போரினாலும் ஒவ்வொரு ஆண்டிலும் மார்ச் 31 திகதி அல்லது அதற்கு முன்னர் கமநலக் குழுவிற்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை ஏக்கர் வரி அறவிடப்பட்டு வருகின்றது. | - மேற்படி - |
| (vii) | உபபிரிவு 75(1) | அனைத்து கமநல சேவைக் குழுக்களினாலும் தமது அதிகாரப் பிரதேசத்தினுள் காணி உரிமை விவசாயிகள் அல்லது விவசாயக் காணிகளை அனுபவிப்போருக்கு அடையாள அட்டைகள் உரிய முறையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விவசாய அடையாள அட்டைகள் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கின்றேன். | - மேற்படி - |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | |
| (i) | நி.பி. 206 | வைப்புக்களில் இருந்து பணம் திருப்பிச் செலுத்தும் போது கொடுப்பனவை பெற்றுக்கொள்ள உரிமையுள்ள நபர்களுக்கு சரியான பெறுமதி திருப்பிச் செலுத்தப்பட்டதென்பதை உறுதிப்படுத்துவதற்காக பணம் வைப்புச் செய்வதற்குரிய பற்றுச்சீட்டின் முதற்பிரதி உறுதிச்சீட்டுடன் இணைக்கபட வேண்டியிருந்த போதிலும் ஒக்கம்பிட்டிய கமநல சேவைக் குழுவினால் அவ்வாறு பற்றுச்சீட்டு | பரிசோதனை செய்து தொடர் நடவடிக்கை எடுப்பேன். | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெற்றுக்கொண்டு இரத்துச் செய்யாமல் வெளி நபர் ஒருவருக்கு 2023 பெப்ரவரி 07 திகதி இலக்கம் 2023/07 கொண்ட உறுதிச் சீட்டின் மூலம் ரூபா 250,000 தொகை செலுத்தப்பட்டிருந்து. | | |
| (ii) | நி.பி. 316 | நிதிப் பெறுமதியுடைய பணம் மற்றும் ஆவணங்கள் வைத்துக்கொள்வதற்காக பாதுகாப்பு இரும்புப் பெட்டியொன்று பயன்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 02 குழுக்களினால் அதற்கிணங்க செயற்பட்டிருக்கவில்லை. | பாதுகாப்பு இரும்புப் பெட்டி பயன்படுத்தும் படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (iii) | நி.பி. 396 | 03 கமநல சேவைக் குழுக்களினால் 2017 – 2022 வரையான காலப் பகுதியில் வழங்கப்பட்டு 06 மாதங்களை கடந்துள்ள ரூபா 211,783 தொகை பெறுமதியான 10 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கப்பட்டது. எதிர் காலத்தில் சரி செய்யப்படும். | - மேற்படி - |
| **(இ)** | **கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கைகள்** | | | |
| | 2014 ஆகஸ்ட் 22 திகதிய 07/2014 (107 திருத்தம் iii) இலக்கம் கொண்ட சுற்றிக்கை | குமநல சேவைக் குழு ஒன்றில் நாளாந்த தடுத்து வைக்கக்கூடிய உச்ச மட்ட தொகை ரூபா 10,000 எனினும், 16 குழுக்களினால் 2023 ஜூலை முதல் செப்தம்பர் வரை கையில் காசு ரூபா 11,658 தொகை முதல் ரூபா 29,283 தொகை வரையான வீச்சில் கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 149 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. | நிலையத்திற்கு அண்மையில் வங்கி காணப்படாமையால் அடுத்த நாள் வங்கியில் வைப்புச் செய்கின்றேன். | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | கமநல அபிவிருத்தி ஆணையாளரினால் வெளியிடப்பட்ட 2023 செப்தம்பர் 13 திகதிய இலக்கம் 7/5/9 – 05 (மெ.ஹெ.பொ) தொகுதி II கொண்ட கடிதம் | கமநல சேவைக் குழுக்களினால் பணம் பரிமாறும் போது சிறு காசு கட்டுநிதி ரூபா 20,000 தொகை பேணிச் செல்வது தவிர ஏனைய பணப் பெறுவனவுகள் அனைத்தும் நாளாந்தம் வங்கியில் இட வேண்டும். அவ்வாறாயினும், 03 கமநல சேவைக் குழுக்களின் நாளாந்த காசேட்டுப் பரிசோதனையின் போது பணம் நாளாந்தம் கணக்கீடு செய்யாமல் 21 சந்தர்ப்பங்களில் ரூபா 85,353 முதல் ரூபா 475,090 தொகை வரையான வீச்சில் பணம் கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட உத்தியோகத்தர்களை அறிவுறுத்தியுள்ளதுடன், நிலையங்களை பரிசோதனை செய்யும் போது தேவையான நடவடிக்கை எடுப்பேன். | சுற்றறிக்கைக்கு இணங்க சிறு காசு கட்டுநிதி தவிர மீதியான பணம் கணக்கீடு செய்து வங்கியில் இடல் மேற்கொள்ள வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் படி 2023 ஆண்டில் 13 கமநல சேவைக் குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 18,227,169 இற்கான மிகையொன்றும், 05 கமநல வங்கிகளின் கூட்டுத்தொகை ரூபா 961,367 இற்கான பற்றாக்குறையொன்றும் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை மற்றும் பற்றாக்குறை முறையே ரூபா 10,344,600 தொகை மற்றும் ரூபா 490,880 தொகையும் காணப்பட்டது. மீளாய்வாண்டின் நிதி விளைவுகளின் படி 18 கமநல வங்கிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,347,870 இற்கான மிகையொன்றும் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 8,106,054 தொகையாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஜனவரி முதல் ஜுலை வரையான காலப் பகுதி தொடர்பாக ஒவ்வொரு மாத இறுதியிலும் வங்கிக் கணக்குகளில் காணப்பட்ட மீதிகளின் படி 09 குழுக்களுக்கு உரிய வங்கி நடைமுறைக் கணக்குகளில் ரூபா 32,916,845 தொகை முதல் ரூபா 114,252,060 தொகை வரையான வீச்சில் காசு மீதிகள் காணப்பட்டதுடன், அந்தப் பணத்தை கூடிய வட்டி வருமானமொன்று கிடைக்கக்கூடிய முறையில் செயற்திறனுடன் | நீண்ட காலமாக கணக்குகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பணம் நிலையான வைப்புக் கணக்கொன்றில் முதலீடு செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும். | குழுக்களுக்கு சொந்தமான நிதியத்தின் மூலம் உச்சமட்ட நலன்களை பெற்றுக்கொள்ளக்கூடியவாறு முறையான அங்கீகாரத்துடன் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

குறுகிய கால முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 18 குழுக்களின் கமநல சேவை அதிகாரப் பிரதேசத்தில் 90426 ஏக்கர் வயற்காணிகள் காணப்படுகின்றதென இனங்காணப்பட்டிருந்த போதிலும், வயற் காணி பெயர் பதிவேட்டின் படி வயற்காணி 29677.5 ஏக்கர் மாத்திரம் வயற்காணி என உட்படுத்தப்பட்டிருந்தது. உரிமையினை உறுதிப்படுத்துவதற்காக எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் 60748.5 ஏக்கர் வயற்காணிகள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிமையை உறுதிப்படுத்திய அனைத்து காணிகளும் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டுள்ளதுடன், உரிமையை உறுதிப்படுத்த முடியாத காணிகளின் விபரங்கள் அனைத்தும் அதற்கான தரவு முறைமையின் வரைபில் உட்படுத்தப்பட்டுள்ளது. | அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற அனைத்து வயற் காணிகளும் பதிவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 05 கமநல சேவைக் குழுக்களுக்கு சொந்தமாக காணப்படும் 49737 ஏக்கர் வயல்கள் "Geo Goviya" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நில அளவை மேற்கொள்வதற்காக 35,248 விண்ணப்பங்கள் கிடைத்திருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும், 21,829 காணித் துண்டுகள் மாத்திரம் நில அளவை விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | வயற் காணிகளின் நில அளவை அலுவல்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன், விரைவாக பூர்த்தி செய்யும் படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | அனைத்து வயற் காணிகளும் விரைவாக நில அளவை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கமநல சேவை அதிகாரப் பிரதேசத்தின் விவசாய காணிப் பதிவேட்டை திருத்தம் மேற்கொண்டு பேணிச் செல்ல வேண்டியிருந்த போதிலும், 04 குழுக்களில் 2018 ஆண்டின் பின்னர் திருத்தம் மேற்கொண்டிருக்கவில்லை. 2019 ஆண்டு முதல் 2023 செப்தம்பர் வரை வயற் காணி பெயர் பதிவேட்டு திருத்தங்களுக்கான 514 விண்ணப்பங்கள் கிடைத்திருந்த போதிலும், அது தொடர்பான அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | காணி உரிமையாளர்களின் திருத்தங்கள் தொடர்பான விண்ணப்பங்களை விரைவாக நிறைவேற்றிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2023 ஆண்டின் போது கதிர்காமம் கமநல சேவைக் குழு மற்றும் கமநல சேவை வங்கிக்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 639,450 தொகை | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | பொருட் பதிவேட்டில் பதியப்பட வேண்டிய அனைத்து சொத்துக்களும் |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியான அச்சு இயந்திரம் மற்றும் கணினி இயந்திரம் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் பொருட் பதிவேட்டில் உட்படுத்தியிருக்கவில்லை. | | பொருட் பதிவேட்டில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு ஏப்ரல் 30 திகதி கணக்கீட்டு மென்பொருள் ஒன்று கொள்வனவு செய்வதற்காக 18 கமநல சேவை நிலையங்களினால் ரூபா 17,131 தொகை வீதம் கூட்டுத்தொகை ரூபா 308,358 தொகை செலவிடப்பட்ட போதிலும், 2024 மார்ச் 31 திகதி அளவிலும் கணினி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு செய்முறை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மென்பொருள் தலைமை அலுவலகத்திலிருந்து கிடைத்த பின்னர் கணினி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு செய்முறை ஆரம்பிக்கப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணினி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு செய்முறை விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 05 கமநல சேவை அதிகார பிரதேசத்தில் 4714 ஏக்கர் வயல்களுக்காக அறவிடப்பட வேண்டிய ஏக்கர் வரி ரூபா 193,280 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை ஏக்கர் வரி அறவிடப்பட்டு வருகின்றது. | அனைத்து வயற் காணிகளிலிருந்தும் ஏக்கர் வரி அறவிடப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டில் சோள விதை கொள்வனவு செய்வதற்காக ரூபா 950,000 தொகை செலவீடு செய்வதற்கும் அவற்றை விற்பனை செய்வதன் மூலம் ரூபா 1,000,000 தொகை உழைப்பதற்கும் திட்டமிட்டிருந்த போதிலும், எதிமலே கமநல சேவைக் குழுவினால் குறிப்பிட்ட செயற்திட்டத்தை செற்படுத்தியிருக்கவில்லை. | செய்முறைசார் சிக்கல்களின் காரணமாக குறிப்பிட்ட கருமத்தை நிறைவேற்ற முடியாதிருந்ததுடன், எதிர் காலத்தில் சரி செய்துகொள்வதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. | யதார்த்தமாக திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டில் விவசாய உபகரணங்கள், விதை நெல், விவசாய இரசாயனப் பொருட்கள் மற்றும் மரக்கறி விதைகள் கொள்வனவு செய்து விற்பனை ரூபா 610,000 தொகை விற்பனை வருமானம் ஒன்று பெறுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், ஒக்கம்பிடிய கமநல சேவைக் குழுவினால் அந்தப் பண்டங்களை கொள்வனவு செய்வதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக அடுத்த போகத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன. | யதார்த்தமாக திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

**3.3 செயற்பாட்டுத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 / 2023 பெரும் போகத்தின் மற்றும் 2023 சிறு போகத்தின் நெற்பயிர்ச் செய்கைக்காக உரம் கொள்வனவு செய்த போது தேவைப்பாட்டினை மிகைத்து உரம் கொள்வனவு செய்திருந்தமையால் 08 கமநல சேவைக் குழுக்களின் கணக்காய்வுக் காலப் பகுதியாகிய 2024 ஜூன் மாதம் இறுதியளவில் ரூபா 21,928,895 தொகைக்கான 120,846 கிலோ கிராம் யூரியா மற்றும் ரூபா 21,925,623 தொகைக்கான 121,399 கிலோ கிராம் MOP உரம் ஆக கூட்டுத்தொகை ரூபா 42,783,878 தொகைக்கான 242,245 கிலோ கிராம் உரம் சுமார் ஒரு வருட காலமாக களஞ்சியங்களில் வைக்கப்படிருந்ததுடன், சந்தையில் உரத்தின் விலை குறைவடைதல் மற்றும் அவற்றின் பண்புசார் தன்மை குறைவடைதல் காரணத்தினால் விவசாயிகளினால் அந்த உரத்தினை கொள்வனவு செய்வதை புறக்கணிக்கப்பட்டிருந்தது. | உரம் கொள்வனவு செய்யப்படுவது பயிர்ச்செய்கையின் இலக்கின் அடிப்படையிலேயே ஆகும். மீதியான உரங்களை அடுத்த போகங்களின் போது விவசாயிகளுக்கு வழங்குவதற்கு அறிவுரை வழங்கப்பட்டது. | போகத்துக்குரிய பரிந்துரைக்கப்பட்ட உரம் கொள்வனவு செய்து உரிய முறையில் வினியோகிக்க வேண்டும். |
| (ஆ) | 16 குழுக்களின் 1991 ஆண்டு முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதியில் பல்வேறு தரப்பினரிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 34,858,926 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை மீதியை தீர்ப்பதற்கு தேவையான அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | சரியாக இனங்கண்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 03 குழுக்களின் ரூபா 3,187,139 தொகைக்கான செலுத்த வேண்டிய மீதிகள், உரிமை கோறாமை மற்றும் போதியளவு தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை ஆகிய காரணங்களினால் நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக காணப்படுவதுடன், அந்த மீதிகளை முறையான அங்கீகாரத்தின் மீது திரண்ட நிதியத்திற்கு செலவு வைத்திருக்கவில்லை. | நிலுவை மீதியை தீர்ப்பதற்கு தேவையான அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 09 குழுக்களில் 1984 ஆண்டு முதல் காணப்படுகின்ற 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 12,951,406 தொகை மீளாய்வாண்டு இறுதியளவிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை மீதியை தீர்ப்பதற்கு தேவையான அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | மீதிகளை உறுதிப்படுத்தி தீர்ப்பற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 05 கமநல சேவைக் குழுக்களில் 2007 முதல் 2015 ஆண்டு வரை 10 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 3,167,273 தொகையினை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிந்தும் சேவையில் இல்லாத உத்தியோகத்தர்களிடம் சட்டரீதியாகவும் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். | அறவீடு செய்யப்பட வேண்டிய மீதிகளை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 03 கமநல சேவைக் குழுக்களில் 2010 முதல் 2015 ஆண்டு வரை உத்தியோகத்தர்களின் ஒழுங்கீனங்கள் காரணமாக ஏற்பட்டிருந்த ரூபா 3,013,366 இற்கான நட்டத்தை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவிலும் நவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | குறிப்பிட்ட உத்தியோகத்தர்களினால் ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவீடு செய்ய வேண்டும். |

**3.4 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2016 ஜூன் 11 திகதிய 10/2015 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் படி கமநல சேவைக் குழுக்களுக்கு சொந்தமான விவசாய இயந்திர உபகரணஙகள் விளைவற்று காணப்படக் கூடாது எனினும், 12 கமநல சேவைக் குழுக்கள் தொடர்பாக ரூபா 15,618,283 தொகை பெறுமதியான 30 உபகரணங்களும், பெறுமதி குறிப்பிடப்படாத 29 உபகரணங்களும் விளைவற்று காணப்பட்டது. | விளைவற்றுக் காணப்படும் உபகரணங்களை தேவையான நிலையமொன்றுக்கு வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டதுடன், தேவைப்பாடு காணப்படா விடின் வேறு மாவட்டம் ஒன்றுக்கு வழங்குவதற்கு இயலுமையைக் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பேன். | விளைவற்ற சொத்துக்கள் செயற்திறனுடன் பயன்படுத்தக்கூடிய குழுக்களுக்கு வழங்க வேண்டும். |
| (ஆ) | 12 கமநல சேவைக் குழுக்கள் தொடர்பாக 12 உத்தியோகபூர்வ வாசஸ்தளங்கள், 02 விற்பனை நிலையங்கள், 05 கடையறைகள் | 12 உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களையும் திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை | விளைவற்ற கட்டிடங்களை செயற்திறனுடன் பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | எடுப்பேன். 02 விற்பனை நிலையங்களை மற்றும் கடையறைகளை செயற்திறனுடன் பயன்படுத்துவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | |
| (இ) | சியம்பலாண்டுவ கமநல சேவைக் குழுவினால் 2019 ஆண்டின் போது கமநல பெறுமைப் போட்டிக்கு ஒத்த நிகழ்வாக குழு நிதியத்திலிருந்து ரூபா 791,957 தொகை பயன்படுத்தி ஹெலபொஜுன் ஹல ஒன்று ஆரம்பிக்கும் குறிக்கோளுடன் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளை சரி செய்து குறிக்கோள்சார் கருமத்திற்கு பயன்படுத்துவற்காக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக காணப்படுகின்ற சிக்கல்களை ஆய்வு செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஹெலபொஜுன் ஹல ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.5 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 10 கமநல சேவைக் குழுக்களின் 2020 ஆண்டின் பின்னர் நீர்ப்பாசனத் திட்டங்கள் மேற்கொண்டிருக்கவில்லை. 2022 ஆண்டில் திருத்த வேலைகள், பராமரிப்பு வேலைகள் மற்றும் அபிவிருத்தி அலுவல்களுக்காக 140 நீர்ப்பாசன செயற்திட்டங்கள் இனங்கண்டிருந்த பொதிலும், அவற்றை கணக்காய்வுத் திகதியாகிய 2024 மார்ச் 04 திகதி அளவிலும் செயற்படுத்தியிருக்கவில்லை. | ஏற்பாடுகள் கிடைத்ததுடன், உரிய நடவடிக்கை எடுப்பேன். | தேவைப்பாடுகளை இனங்கண்டு முக்கியத்துவ அடிப்படையில் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பிபில கமநல சேவைக் குழுவிற்குச் சொந்தமான ஹாவாப்பொல விவசாய ஆய்வு உற்பத்தி உதவியாளர் பிரிவில் உயன்கும்புர குளத்தின் தீப்பெட்டிப் பாலத்தை புனர்நிர்மாணம் செய்தல் தொடர்பாக 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்திடம் வேண்டியிருந்த போதிலும் அது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் | முக்கியத்துவம் தேவைப் பாட்டின் மீது மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்காக அரசிடம் இருந்து கிடைக்கக்கூடிய ஏற்பாடுகளின் படி செயற்பட நேரிடுகின்றது. | தேவைப்பாடுகளை இனங்கண்டு முக்கியத்துவ அடிப்படையில் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2023/2024 பெரும் போகத்தில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் 56 ஏக்கர் வயற் காணிக்கு பயிர் செய்கைக்காக நீர் பெற்றுக்கொள்ள முடியாமல் போனது. | | |
| (இ) | நெல்லியத்த கமநல சேவைக் குழுவிற்கு சொந்தமான கல்கமுவ விவசாய ஆய்வு உற்பத்தி உதவியாளர் பிரிவின் பயிலேகந்த குளத்தை மறுசீரமைப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டம் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்த காரணத்தினால் 2019 ஆண்டு முதல் குளத்தின் நீரைப் பயன்படுத்தி வயல் விதைக்கும் 56 விவசாயிகளுக்குரிய 170 ஏக்கர் வயல் நிலம் 03 வருட காலம் முதல் பயிர் செய்ய முடியாத நிலைமையை அடைந்திருந்தது. | கிடைக்கக்கூடிய ஏற்பாடுகளின் மீது நடவடிக்கை எடுக்க நேரிடுகின்றது. | குறிப்பிட்ட செயற்திட்டங்கள் உரிய நேரத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | அலுத்வெவ கமநல சேவைக் குழுவின் அதிகாரப் பிரதேசத்தைச் சேர்ந்த 34 விவசாயிகளுக்கு சொந்தமான 35 ஏக்கர் வயற்காணியை பயிர் செய்வதற்காக கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2022 ஆண்டின் போது ரூபா 1,187,200 தொகை செலவிடப்பட்டு கரகொடே குளத்தின் அணைக்கட்டு மற்றும் படைக்கதவு மறுசீரமைக்கும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும், வயற் காணிகள் தொடர்பாக அந்த விவசாயிகளுக்கு சட்டரீதியான உரிமை காணப்படாமையால் வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் விவசாயிகளை பயிர் நிலங்களுக்கு நுழைவதற்கு தடை விதித்த காரணத்தினால் பயிர்ச் செய்கை மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்ட வயற்காணிகளில் பயிர் செய்ய முடியாமல் போனது. அதன்படி, குளங்களை மறுசீரமைப்பதன் மூலம் எதிர்பார்க்கபட்ட குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏதேனும் நிர்மாண வேலையொன்று மேற்கொள்ள முன்னர் குறிப்பிட்ட காணியை சட்டரீதியாக உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.6 ஏனைய அமைப்புக்களின் வளங்களை பயன்படுத்தல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2022 ஏப்ரல் 20 திகதிய 7/3/11/CSIAP.Mac/COM/2022 கொண்ட வழிகாட்டலின் அத்தியாயம் 02(ii) இற்கு இணங்க பண்ணை இயந்திர உபகரணங்கள் மற்றும் துணைக் கருவிகள் பேணிச் செல்வதற்காக வெள்ளவாய கமநல சேவைக் குழுவினால் துணைக் குழுவொன்று நியமனம் செய்திருக்காததுடன், வெள்ளவாய மற்றும் புத்தள கமநல சேவைக் குழுக்களினால் அந்த அலகின் மேற்பார்வை அலுவல்களுக்காக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செயய்யப்பட்டிருக்கவில்லை. நேய நீர்ப்பாசன விவசாய செயற்திட்டங்களின் கீழ் குழுவிற்கு வழங்கப்பட்டிருந்த சொத்துக்களின் பெறுமதி தொடர்பாக தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கபட்டிருக்காததுடன், 2021 ஆண்டின் போது கிடைத்திருந்த நெற்பயிர்ச் செய்கைக்கு பயன்படுத்தப்படும் 02 கன்றுகள் / விதைகள் தெளிக்கும் இயந்திரங்கள் 2022 ஆண்டின் போது கிடைத்திருந்த 08 கன்றுகள் நடும் இயந்திரங்கள் மற்றும் 10,415 நாட்டுமேடை தட்டுக்கள் 2023 ஆண்டின் போது கிடைத்திருந்த 06 களை பிடுங்கி இயந்திரங்கள், 2023 ஆண்டின் போது கிடைத்திருந்த 07 நடமாடும் யானை வேலி உபகரணத் தொகுதிகள் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தன. | புத்தள நிலையத்தின் அலகின் மேற்பார்வைக்காக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளது. ஏனைய இயந்திர உபகரணங்கள் போகத்தின் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கும் போது விவசாயிகளின் தேவைக்காக அவர்களின் வேண்டுகோளின் படி விவசாய ஆலோசகர்களின் மேற்பார்வையில் மற்றும் வழிகாட்டலின் கீழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நடமாடும் யானை வேலி அந்த போகங்களின் போது பயன்படுத்தப்பட்டு மீண்டும் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்படுகின்றன. போகத்தின் போது தேவைப்பாட்டின் படி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வழிகாட்டல்கள் மற்றும் சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | நேய நீர்பாசன விவசாய செயற்திட்டத்தின் கீழ் நெலுல்ல கமநல சேவை நிலையத்திற்கு கிடைத்திருந்த கன்றுகள் நடும் இயந்திரம் ஒன்று விவசாய ஆலோசகரினால் 2022 ஆண்டின் போது முறைசாரா விதமாக விவசாயி | நிலையங்களின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற உபகரணங்கள் முறைப் பிரகாரம் மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டது. | குழுக்களுக்கு சொந்தமான இயந்திரங்கள் குறிப்பிட்ட கருமம் முடிவடைந்தவுடன் மீண்டும் குழுவிற்கு பெற்றுக்கொள்வதற்கு |

| | | |
|---|---|---|
| ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியாகிய 2024 பெப்ரவரி 29 திகதி அளவிலும் அந்த இயந்திரம் குறிப்பிட்ட விவசாயியினால் கமநல சேவை நிலைத்திற்கு பாதுகாப்பாக ஒப்படைத்திருக்கவில்லை. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த 2022 ஜனவரி 11 திகதிய 7/5/12/க.அ. பொது இலக்கம் கொண்ட கடிதத்தின் படி கமநல சேவைக் குழுக்களினால் நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட்டு அனைத்து ஆண்டுகளிலும் மார்ச் 31 திகதி அளவில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 03 கமநல சேவை நிலையங்களினால் 2024 ஏப்ரல் 01 முதல் 2024 மே 27 வரை 57 நாட்கள் தாமத்தின் பின்னர் இறுதிக் கணக்குகள் சமர்ப்பிக்கபட்டிருந்தது. | எதிர் காலத்தில் இறுதிக் கணக்குகள் தாமதமின்றி சமர்ப்பிப்பேன். | உரிய தினத்தில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 5 கமநல வங்கிகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 18 கமநல வங்கிகளினால் 1999 / 2000 பெரும் போகத்திலிருந்து 2023 சிறு போகம் வரை விவசாய உபகரணக் கடன், செயற்திட்டக் கடன், பயிர்ச் செய்கைக் கடன், ஸார லங்கா மற்றும் சௌபாக்கிய ஸார லங்கா ஆகிய கடன் வகைகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய நிலுவைக் கடன் ரூபா 106,559,775 தொகை மற்றும் வட்டித் தொகை ரூபா 16,897,629 தொகையாக மொத்தம் ரூபா 123,457,404 தொகை கணக்காய்வுத் திகதியாகிய 2023 திசெம்பர் 31 திகதி வரை அறவீடு | இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கால தாமதமாகிய கடன் தொகைகளை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் வெல்லவாய கமநல வங்கிக்கு 03 வருட காலத்திற்காக வழங்கியிருந்த மூலதனத் தொகை ரூபா 2,000,000 தொகையில் ரூபா 1,500,000 தொகையொன்று கணக்காய்வுத் திகதியாகிய 2024 மார்ச் 25 திகதி அளவிலும் மீண்டும் திணைக்களத்திற்கு அனுப்பியிருக்கவில்லை. | இதற்கான வட்டி செலுத்தப்பட்டுள்ளதுடன், நிலுவை மூலதனத் தொகை விரைவாக செலுத்துவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட பணம் விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |